1993 மார்ச் 16]

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. ம. சின்னசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்.

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1972-73 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பான குறிப்புரைகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த ஐம்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் தொன்னூற்று ஆறாவது அறிக்கை.

(2) போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடு குறித்த குழுவின் தொன்னூற்று ஏழாவது அறுக்கை.

(3) தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் 1985-86 ஆம் ஆண்டு முதல் 1989-90 ஆம் ஆண்டு வரையிலான கணக்குகளின் தணிக்கை அறிக்கைகள் மீதான குழுவின் தொன்னூற்று எட்டாவது அறிக்கை.

(4) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980-81 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான பத்திகள் குறித்த பொது நிறுவனங்கள் குழு அளித்த இருபத்தாறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் தொன்னூற்று ஒன்பதாவது அறிக்கை.

(5) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1987-88 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தொழில்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த இருபத்தொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவட்க்கை பற்றிய குழுவின் நூறாவது அறிக்கை.

[திரு. ம. சின்னசாமி] [1993 மார்ச் 16

(6) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் *1987-88* ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் பொதுப் பணித் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த இருபத்திரெண்டாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துறைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்று ஒன்றாவது அறிக்கை.

(7) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் *1981-82* ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த முப்பத்து மூன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் நூற்று இரண்டாவது அறிக்கை.

(ஆ) சட்டவிதிகள் ஆய்வுக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் *1992-93* ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் எட்டாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள்-அறிமுகம் செய்தல்.

சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்). *1993* ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர்.

*** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"*1993* ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் தொடர்பான (தகுதியிழத்தல் தடுப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.